
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1259

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

65

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# விவசாயத்துக்கு இலவச மின்சாரம்! “இன்றும் என்றும் ரத்து செய்ய முடியாது!”

*2003-ஆம் ஆண்டு, அன்றைய ஒன்றிய அரசு ‘மின்சார ஒழுங்குமுறை மசோதா’ ஒன்றை நிறைவேற்றியது. மின்சாரம் தொடர்பாக, நடைமுறையில் இருந்த அனைத்து சட்டங்களுக்கும் மாற்றாக, அந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. அனைத்து மாநிலங்களிலும் உள்ள மின்சார ஒழுங்குமுறை ஆணையங்களை, இந்த மசோதா கட்டுப்படுத்தியது. 10.06.2003 அன்று நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்த, ‘விவசாயத்துக்கு இலவச மின்சாரம்’ திட்டத்துக்கும் ஆபத்து உருவானது. இந்தச் சட்டத்தின்படி, ‘எல்லா மின் நுகர்வோருக்கும் விதிவிலக்குகள் இன்றி, மீட்டர் பொருத்தப்பட வேண்டும். அதாவது, மீட்டர் இல்லாமல் எந்த மின் நுகர்வோருக்கும் மின்சாரம் கொடுக்கக் கூடாது’ என்று மசோதா கூறியது. குறிப்பாக, ‘இலவசமாக மின்சாரம் வழங்கக் கூடாது’ என்றும் கூறியது.*

*1992-ஆம் ஆண்டில் அம்மையார் அரசு, விவசாயிகளுக்கு அளிக்கும் இலவச மின்சாரத்துக்கு நெருக்கடி அளித்து, பின்னர் திரும்பப்பெற்றது போல, மீண்டும் உருவாகி விடக் கூடாது என, 1999-இல் மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தை உருவாக்கி, ‘மாநில அரசு விருப்பத்தின்படி, இலவச மின்சாரத் திட்டத்தினைத் தொடரலாம்’ என்கிற பாதுகாப்பினை வழங்கி இருந்தார் கலைஞர். 2001-ஆம் ஆண்டு ஆட்சிக்காலம் முடியும் வரை, விவசாயத்துக்கு இலவச மின்சாரம் திட்டத்தினை நிறைவேற்றவும் செய்தார்.*

*அந்தப் பாதுகாப்புக்கும் 2003-இல் ஒன்றிய அரசின் புதிய மசோதா நெருக்கடி அளித்தது. நாடாளுமன்றத்தில், தி.மு.க. உறுப்பினர்களின் வலுவான எதிர்ப்பினைப் போலவே, சட்டமன்றத்தில் அம்மையார் அரசு புதிய மின்சார ஒழுங்குமுறை மசோதாவைக் கொண்டுவந்தபோது, தி.மு.க. உறுப்பினர்களின் எதிர்ப்பு, பலமாக இருந்தது.*

### மணி ஆர்டரில் மானியம்


*‘இலவச மின்சாரத்திற்கான மானியத் தொகையை, நேரடியாக விவசாயிகளுக்கு மணிஆர்டர் மூலம் அனுப்பி, அந்தத் தொகையைக் கொண்டு விவசாயிகள் மின் கட்டணம் செலுத்தலாம்’ என்ற அறிவிப்பினை வெளியிட்டதும், அந்த அறிவிப்புக்கு எதிராக, 21.3.2003 அன்று, சட்டப்பேரவையில் இருந்து தி.மு.க. உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் வெளிநடப்பு செய்தன.*

*தமிழ்நாடு முழுவதும் மூன்று கட்டங்களாக, ‘கண்டனப் பொதுக்கூட்டம்’, ‘பேரணி’, அதற்கடுத்து ‘முற்றுகைப் போராட்டம்’ என அடுத்தடுத்துப் போராட்டங்களில் இறங்கியது கழகம். 2003-ஆம் ஆண்டு மார்ச் 22-ஆம் தேதி, திருச்சியில் கலைஞர் தலைமையேற்ற மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. “விவசாயிகள் கொதித்தெழுந்தால், ஏர் பிடித்தவன் போர்முனைக்கு வந்தால், அ.தி.மு.க. ஆட்சிதாங்காது” என்றார். “ஆட்சியினர் உடனே திருந்த வேண்டும், இல்லையென்றால் தமிழ் மக்களே திருத்துவார்கள்!” என்று கோபாவேசம் காட்டினார், கலைஞர்.*

*2003-ஆம் ஆண்டு நவம்பர் மாதம், சட்டமன்றத்தில் அம்மையாருடன் கழக உறுப்பினர்கள் காரசார விவாதம் நடத்தினர்.*

*“விவசாயத்துக்கு மின்சாரம் இலவசம்தான். ஆனால், கட்டணத்தை விவசாயிகளே செலுத்த வேண்டும்” என்கிற புதிய விளக்கத்தை, சட்டமன்றத்தில் அளித்தார், அம்மையார். ஒன்றிய அரசின் சட்டப்படி நடப்பதால், சட்டத்தை மீறி ஒன்றும் செய்ய முடியாது என்று விவசாயிகளின் நலனைப் புறக்கணித்தார்.*

*தவிர, விவசாயிகள் மின் கட்டணத்தைச் செலுத்தும் நெருக்கடியையும் அளித்தார். ‘மின் கட்டணம் செலுத்தாத மீட்டர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்படும்’ என அறிவிக்கப்படாத நெருக்கடி உருவாக்கப்பட்டது. அதனால், பயத்தில் விவசாயிகள் செலுத்திய மின் கட்டண விவரங்களை சட்டமன்றத்தில் அறிவித்து, பெரும்பான்மையான விவசாயிகள் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவித்தார்.*



*இதே காலகட்டத்தில்தான் அம்மையார், ‘மதம் மாறத் தடைச் சட்டம்’, ‘அரசு ஊழியர்கள் அதிரடியாகப் பணி நீக்கம்’ எனப் பல அராஜகங்களை நிகழ்த்தினார். இவற்றுக்கு எதிராகவும் எதிர்க்கட்சிகளை அணி சேர்த்த தலைவர் கலைஞர், மக்களிடம் அவற்றைக் கொண்டுசென்றார். விளைவு, 2004-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் அம்மையார் கூட்டணி பெரிய தோல்வியைச் சந்தித்தது. அதையடுத்து, அம்மையார் தனது முந்தைய பல முடிவுகளை மாற்றி அறிவித்தார். அவற்றில், விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்தை மீண்டும் அமல்படுத்தியதும் ஒன்று. ஒன்றிய அரசின் சட்டத்தினைக் காரணம் காட்டி, ரத்துசெய்த திட்டத்தைத் தேர்தல் தோல்வி காரணத்தால் மீண்டும் கொண்டுவந்தார் அம்மையார்.*

### கழகம் பெற்ற குழந்தை!

*அதன்பின்னர் 2006-ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற கலைஞர், ‘இலவச மின்சாரம் என்பது அரசின் விருப்பத் திட்டமாக இருக்கக் கூடாது, நிரந்தர திட்டமாக இருக்க வேண்டும் எனச் சில சீர்திருத்தங்களைச் செய்தார். குறிப்பாக, தமிழ்நாடு மின்சாரச் சட்டத்தில் (Tamil Nadu Electricity Reforms/ Appropriate State Provisions) தேவையான திருத்தங்களைச் செய்து, இலவச மின்சாரம் தொடர்வதற்கு மாநில அரசே மானியம் வழங்கும் அமைப்பை உறுதிப்படுத்தினார். அதன்படி, விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்திற்கான தொகையை தமிழ்நாடு அரசே பட்ஜெட்டில் மானியமாக ஒதுக்கத் தொடங்கியது. இதனால், மின்வாரியத்தின் கணக்கில் ஏற்படும் இழப்பு, அரசு மானியமாக ஈடுசெய்யப்பட்டது.*

*இதன்மூலம், மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கட்டணம் நிர்ணயித்தாலும் அந்தத் தொகையை விவசாயி செலுத்த வேண்டியதில்லை, அரசே மானியமாக வழங்கும் நடைமுறை வலுப்பெற்றது.*

*‘விவசாயிகள் போராட்டம்’, ‘உயிர்ப்பலி’, ‘நிதிச்சுமை’, ‘மணி ஆர்டரில் மானியம்’, ‘ஒன்றியச் சட்டம்’, ‘தேர்தல் தோல்வி’ எனப் பல கட்டங்களைத் தாண்டி இலவச மின்சாரம் நிலைபெற்றுள்ளது என்றால், அதற்குக் காரணம் கலைஞர்தான். 2010-ஆம் ஆண்டு, செய்தியாளர்கள் சந்திப்பில், கலைஞரிடம் ஒரு கேள்வி முன்வைக்கப்பட்டது. ‘இலவச மின்சாரத் திட்டத்திற்கு, மின் மீட்டர் பொருத்துவதால் திட்டம் ரத்தாகும் என்ற அச்சம் உள்ளதே’ எனக் கேட்கிறார்கள்.*

*‘இந்த அரசு இலவச மின்சாரத்தை ரத்து செய்யப்போகிறது என்று ஒரு தவறான பிரச்சாரத்தை எதிர்க்கட்சியிலே உள்ள சிலர், விவசாயிகள் மத்தியில் பரப்புகிறார்கள். நான் இப்போதும் சொல்கிறேன், எப்போதும் சொல்வேன். நிச்சயமாக இந்த இலவச மின்சாரம் என்பது ரத்துசெய்யப்பட மாட்டாது. ஏனென்றால், இதைக் கொண்டு வந்தவர்களே நாங்கள்தான். இலவச மின்சாரத் திட்டத்தைத் தமிழ்நாட்டிலே அறிமுகப் படுத்தியதே நாங்கள்தான். நாங்களே, நாங்கள் பெற்ற பிள்ளையைக் கழுத்தை நெரித்து எறிய மாட்டோம்” என்றார். அதில் உறுதியாகவும் நின்றார். அவர் வழியில், ‘திராவிட மாடல் ஆட்சி’யில் இலவச மின்சாரத் திட்டத்தினை வலுவாக்கினார், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.*

*கடந்த 30 ஆண்டுகளாக விவசாயிகள் பெற்றுவருகிற இலவச மின்சாரம் என்பது சலுகையல்ல, அது உரிமை. இந்த உரிமையை எவராலும் பறிக்க முடியாது. ஏனென்றால், பெற்றுத்தந்தது, முத்தமிழறிஞர் கலைஞர்.*

“கடந்த 30 ஆண்டுகளாக விவசாயிகள் பெற்றுவருகிற இலவச மின்சாரம் என்பது சலுகையல்ல, அது உரிமை. இந்த உரிமையை எவராலும் பறிக்க முடியாது. ஏனென்றால், பெற்றுத்தந்தது, முத்தமிழறிஞர் கலைஞர்.”

**...தொடரும்**

## பொய்கள்... பொய்கள்... பொய்கள்!

த.வெ.க. அரசின் பொய்களைத் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி வரும் பத்திரிகையாளர் அரவிந்தாக்‌ஷன், அரசைக் கவிழ்க்க சதி எனப் பரப்பப்பட்ட செய்தியின் பின்புலம் குறித்து எழுதிய பதிவு இது.

“ஊத்தங்கரை எம்.எல்.ஏ. வழக்கில் மூன்று நபர்களே காவல் துறையால் கஸ்டடி எடுக்கப்பட்டனர். ஆனால், ஐந்து பேரை கஸ்டடி எடுத்து காவல் துறை விசாரிக்கிறதென அடுத்த நாள், பெயரோடு செய்தி வெளியிடுகின்றனர். உண்மையில், செஷன்ஸ் கோர்ட் உத்தரவைப் படிக்காமலேயே, ‘5 பேர், 5 பேர்’ எனச் செய்தியை அடுத்த நாள் ஒளிபரப்பியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் என்ன எழுதியுள்ளதென்றே தெரியாத நிலையில், பேப்பரில் கையொப்பம் வாங்கினர். சிலரது பெயரைக் குறிப்பிடச்சொல்லி, போலீஸார் மிரட்டினர், கட்டாயப்படுத்தினர் என்றெல்லாம் நீதிமன்றத்தில் கூறியுள்ளனர்.

அது கஸ்டடி உத்தரவிலும் பதிவாகியிருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் ஒரு வரிகூட செய்தி வெளியிடாதவர்கள்... ஏன், ஐந்து பேர் எனப் பொய்களைப் பரப்பினார்கள்?

கைதாகியுள்ள நபர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இது ஒரு வகையான உளவியல் அச்சுறுத்தல்.

ஊத்தங்கரை எம்.எல்.ஏ.வை ஒளித்து வைத்துள்ள நபர்கள் யாரையோ அச்சுறுத்த, எதையோ கட்டமைக்க, ஊடகங்களில் பணியாற்றும் நபர்களோடு சிண்டிகேட் அமைத்து, இதைச் செய்து வருகின்றனர். கடந்த இரண்டு தினங்களாக, ஊத்தங்கரை எம்.எல்.ஏ. வழக்கில், ‘காவல் துறை தகவல்’, ‘காவல் துறை தகவல்’ என எந்தச் செய்தியும் வெளிவரவில்லை. கவனித்தீர்களா?

எப்போ எதைச் செய்யணும், எது செய்தியாக வரவேண்டும் என்ற திட்டத்துடன் ஒரு கும்பல் தீவிரமாகப் பணியாற்றி வருகிறது. அவர்களோடு கரம் கோர்த்து, சிண்டிகேட் அமைத்து, எந்த ஆதாரமும் இல்லாமல், ‘காவல் துறை தகவல்’ என்ற டெம்ப்லேட் வார்த்தையைப் பயன்படுத்தி, இளம் செய்தியாளர்களால் ஊடகங்களில் அப்பட்டமான பொய்கள் பரப்பப்படுகின்றன” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### நெருக்கடியான காலகட்டத்தில்...



துரை. திருநாவுக்கரசு

1994-ஆம் ஆண்டு காலகட்டத்தில், கழகத்திலிருந்து வைகோ பிரிந்தபோது, விழுப்புரம் மாவட்டத்தின் பெரும்பாலான நிர்வாகிகளுடன் வைகோவை ஆதரித்து, ம.தி.மு.க.வில் இணைந்தார், செஞ்சி இராமச்சந்திரன். அதே நேரத்தில்தான், விழுப்புரம் மாவட்டப் பகுதிகளில் ‘வன்னியர் சங்கம்’ ‘பாட்டாளி மக்கள் கட்சி’யாக உருவெடுத்து வளர்ந்துவந்தது. அரசியல் நெருக்கடி மிகுந்த அந்நேரத்தில், கழகத் துணைப் பொதுச்செயலாளர் அண்ணன் க.பொன்முடி அவர்கள், ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டத்தில் கிளைகள் தோறும் கழகக் கொடியேற்றும் நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்து, கழகத்தினரை ஓரணியில் திரட்டினார். மாவட்ட அளவிலான நிர்வாகிகளை, அண்ணா அறிவாலயம் வந்து, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர், ஆற்காட்டார் ஆகியோரிடம் வாழ்த்துப் பெற வைத்தார். அப்போது எடுக்கப்பட்ட படம்.

**– துரை.திருநாவுக்கரசு,**
**முன்னாள் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்,**
**மாவட்டப் பிரதிநிதி, வல்லம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

கருவூலம்

## இலக்கிய அணி தொடக்கம்!

1977-ஆம் ஆண்டு மே மாதம் 7-ஆம் தேதி, கழகத்தின் சார்பில் துணை அணிகளில் ஒன்றாக ‘இலக்கிய அணி’ அமைக்கப்பட்டது. ‘தமிழ் மொழி’, ‘இன உணர்வு’, ‘தமிழர் கலாச்சாரம்’, ‘வரலாறு’ இவற்றுடன் பகுத்தறிவு பரப்பும் பணியை, இலக்கிய அணி மேற்கொள்வது என்று முடிவுசெய்யப்பட்டது. தலைமை அணிக்கான நிர்வாகிகளின் பெயர்கள், சென்னையில் கூடிய அமைப்புக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900